புதுச்சேரி மாசுக் கட்டுப்பாடு குழுமம்
3-ஆம் தளம், PHB கட்டிடம், அண்ணா நகர், புதுச்சேரி - 605 005.
தொலைபேசி : (0413) 2201256; தொலைநகல் : (0413) 2203494

# பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்துவது தொடர்பான அறிவிப்பு

இந்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட கடலோர ஒழுங்குமுறை மண்டல (CRZ) அறிவிக்கை, 2019-இன்படி, புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் நான்கு பிராந்தியங்களுக்குமான திருத்தியமைக்கப்பட்ட வரைவு கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்தை (CZMP) புதுச்சேரி அரசு தயாரித்துள்ளது என்பது தொடர்புடைய அனைவருக்கும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. இத்திட்டத்தில் கடலோர ஒழுங்குமுறை மண்டலத்தின் (CRZ) கீழ் வகைப்படுத்தப்பட்ட பகுதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன. கடலோர ஒழுங்குமுறை மண்டல பகுதிகளில் மேற்கொள்ளப்படும் அனைத்து வளர்ச்சிப் பணிகளும் கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை, 2019-இன் விதிமுறைகளுக்கு உட்பட்டு ஒழுங்குப்படுத்தப்படும்.

மேற்படி கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்தை இறுதி செய்வதற்கான நடைமுறையின் ஒரு பகுதியாக, உள்ளூர் மக்களின் கருத்துகள், ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளைப் பெறுவதற்காக, கீழ்க்கண்ட விவரங்களின்படி பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | திட்டத்தின் விவரம் | பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்தின் நாள் மற்றும் நேரம் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 1 | புதுச்சேரி அரசால் தயாரிக்கப்பட்ட கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை, 2019-இன் படி காரைக்கால் மாவட்டத்திற்கான திருத்தியமைக்கப்பட்ட கடலோர மண்டல மேலாண்மைத் திட்டம் (CZMP). | 25.11.2026 காலை 11.00 மணி | M/s. SLM திருமண மண்டபம், அம்மாள் சத்திரம், காரைக்கால் - 609 602 |

**திருத்தியமைக்கப்பட்ட காரைக்கால் மாவட்டத்திற்கான கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்தின் பிரதிகள்** கீழ்க்கண்ட அலுவலகங்களில் அலுவலக வேலை நேரங்களில், வேலை நாட்களில் பார்வையிடுவதற்காக வைக்கப்பட்டுள்ளன.

1. மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காரைக்கால்.
2. ஆணையர் அலுவலகம், காரைக்கால் நகராட்சி, காரைக்கால்.
3. ஆணையர் அலவலகம், திருமலைராயன் பட்டினம் கொம்யூன் பஞ்சாயத்து காரைக்கால்.
4. ஆணையர் அலுவலகம், நிரவி கொம்யூன் பஞ்சாயத்து, காரைக்கால்.
5. ஆணையர் அலுவலகம், கோட்டுச்சேரி கொம்யூன் பஞ்சாயத்து, காரைக்கால்.
6. ஆணையர் அலுவலகம், நெடுங்காடு கொம்யூன் பஞ்சாயத்து, காரைக்கால்.
7. துணை இயக்குநர் அலுவலகம் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, காரைக்கால்.
8. புதுச்சேரி மாசுக்கட்டுப்பாடு குழுமம், நேரு நகர், காரைக்கால்.

திருத்தியமைக்கப்பட்ட வரைவு கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்தின் (CZMP) வரைபடங்களின் பிரதிகளையும் புதுச்சேரி மாசுக்கட்டுப்பாடு குழுமத்தின் இணையதளமான **https://dste.py.gov.in/ppcc/CZMP-kkl-2026.html** என்ற முகவரியில் பார்வையிடலாம். பொதுமக்கள் தங்களது கருத்துகள் ஆலோசனைகள் மற்றும் பதில்களை இவ்வறிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்துப் பூர்வமாகப் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

உறுப்பினர் செயலர்
**புதுச்சேரி மாசுக் கட்டுப்பாடு குழுமம்**
3-ஆம் தளம், PHB கட்டிடம்,
அண்ணா நகர், புதுச்சேரி - 605 005.
மின்னஞ்சல் முகவரி : ppcc@py.gov.in

No.242/DIP/AD(Press)/2026-27

தினத்தந்தி
பக்கம் - 11
தஞ்சாவூர் 24-10-2026